# "துப்பாக்கியினால் பூட்டப்பட்ட ஜனநாயகக் கதவுகள்"

வி.கே.யோகசங்கரி பா.உ



# "துப்பாக்கியினால் பூட்டப்பட்ட ஜனநாயகக் கதவுகள்"

தோழர்.வி.கே.யோகசங்கரி. பா.உ.

வெளியீடு:
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம்.
19.06.1995

## தோழர்.சங்கரி ......................

தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை அம்பலப்படுத்திட, மறுக்கப்படும் உரிமைகள் கோரி ஜனநாயக முறையில் போர்க்கொடி உயர்த்திட பாராளுமன்றத்தை ஒரு களமாகப் பயன்படுத்திய இளைய தலைமுறையின் புதிய சிந்தனை கொண்ட நடைமுறையாளன் தோழர்.சங்கரி.

பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் குரல்கள் மங்கி வெற்றிடம் ஏற்பட்டுவிடுமோ என்று அனைவரும் அஞ்சிய வேளையில், யாமிருக்கப் பயமேன் என்று அபயக்கரம் நீட்டி வெற்றிடத்தை நிரப்பியவர்.

யாமார்க்கும் குடியல்லோம் என்று நெஞ்சுறுதியும், நேர்மைத்திறனும் கொண்டு பாராளுமன்றத்தில் ஆக்ரோஷமாக அவர் ஆற்றிய சாகவதமான உரைகள் எதிரிகளுக்கு சிம்ம சொப்பனம்.

விடுதலையை மறந்து, வெறுத்து வெளிநாட்டுச் சொகுசு வாழ்க்கையில் கரந்துறையும் தமிழ்பேசும் மக்கள் மத்தியிலிருந்து, வெளிநாட்டு வாழ்க்கையை வெறுத்து தனது மண்ணையும், மக்களையும் நேசித்து, தாயகம் திரும்பி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியூடாகத் தன்னை விடுதலையில் இணைத்துக் கொண்டு இறுதிவரை உறுதியுடன் போராடியவர்.

மானுடநேயமும், அமைதி, சமாதானம், ஜனநாயகச் சூழலும் கொண்ட ஒரு வாழ்வு தமிழ்பேசும் மக்களுக்கு கிடைக்க வடக்கு கிழக்கு மாகாண அரசு செயல்வடிவம் பெறுவது அவசியம் என்பதை உணர்ந்து அரும்பாடுபட்டவர்.

தலை போனாலும் விலைபோகாத விறல்மிகு விற்பன்னர். மலைகுலைந்தாலும் நிலைகுலையாத வைரநெஞ்சு கொண்டு மக்களுக்காய் வாழ்ந்த மகத்தான மனிதன். சென்னையில் வைத்து **19,06,1990** இல் தோழர்.பத்மநாபா மற்றும் பதினொரு ஆற்றல்மிகு தோழர்களுடன் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

தோழர்.சங்கரியின் காலத்தால் அழியாத, கருத்தாழமிக்க பாராளுமன்ற உரைகளில் சிலவற்றை தொகுத்து தியாகிகள் தின நினைவாக வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
**சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம்.**

## மாகாண அரசின் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இப்பிரச்சனையை தீருங்கள்.

**பொலிஸ் ஆணைக்குழு சட்டமூலம் மீதான விவாதத்தில் 9. 12. 1989 இல் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை.**

எமது கட்சியின் கடந்த ஒரு வருடகால கோரிக்கை இன்றாவது இங்கே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று பொலிஸ் ஆணைக்குழு சட்டமூலம் மீதான விவாதத்தில் நாம் கலந்து கொள்வதையிட்டு ஆனந்தமடைகிறேன்.

இந்தச் சட்ட மூலம் உரிய காலத்தில் இங்கே சட்டமாக்கப் படாததனால் எவ்வளவு அனர்த்தங்கள் இந்த நாட்டில் ஏற்பட்டிருக் கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற அனர்த்தங்கள், மட்டக்களப்பு மாவட்டத்திலே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் அனர்த்தங்கள் யாவற்றுக்கும் இப்படியான சட்டமூலம் உருவாகாமல் இருந்ததுதான் காரணம் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்ட போது, தமிழ்பேசும் மக்களின் முழு அபிலாசைகளையும் அதனால் பூர்த்தி செய்யமுடியாமல் இருந்த போதிலும் கூட இலங்கை இந்திய அரசாங்கங்களின் வாக்குறுதிகளை நாம் ஏற்றுக் கொண்டோம்.

எல்.ரி.ரி.ஈ.க்கும், இந்திய அமைதிப்படைக்கும் ஏற்பட்ட மோதல்கள் அந்த அமைதியை குழப்பியது. இருந்த போதிலும் கூட ஒருங்கிணைந்த சிறிலங்காவில் நாம் உரிமையுடன் வாழவேண்டும் என்றும், அதற்காகக் கிடைத்திருக்கும் மாகாணசபையை ஏற்று நாம் அதிலிருந்து முன்னேற வேண்டும் என்றும் எமது கட்சியாகிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முடிவு செய்தது.

அதன் அடிப்படையில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவது என எமது கட்சி முடிவு செய்தது. அன்றைய காலகட்டத்தில் தேர்தல் நடக்கக் கூடிய சூழல் இருக்கிறதா என்று அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா அவர்களே சிந்தித்த வேளையில், ஏன் எமது

மதிப்புக்குரிய, இந்தச் சபையைக் கௌரவித்த, எமது குழுவின் தலைவராக இருந்த காலஞ் சென்ற அமிர்தலிங்கம் அவர்கள் "ஜனநாயகத்தின் கதவுகள் துப்பாக்கிகளால் மூடப் பட்டிருக்கின்றன" என்று கூறித் தேர்தலில் நிற்காமல் ஒதுங்கி நின்ற நேரத்தில், ஏன் இன்று இந்தச் சபையைக் கௌரவிக்கின்ற பதின்மூன்று உறுப்பினர் களின் கட்சி "அமைதிக்குப் பின் தேர்தலா, தேர்தலின் பின் அமைதியா" என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருந்த வேளையில்.......

சவால்களை ஏற்று, இந்தநாட்டிலே ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும், அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் தேர்தலில் போட்டியிட முற்பட்டோம்.

அதன்பின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இன்று ஜனாதிபதியான அமர்ந்திருக்கும் அதிஉத்தம ஆர்.பிரேமதாசா அவர்கள் தமிழ்பேசும் மக்களின் வாக்குகளின் மூலமே தமது மேலதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்டார் என்ற உண்மையை நாம் இங்கே மறந்து விட முடியாது. அதன்பின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

அன்றைய மாகாண சபைத் தேர்தலிலே துணிந்து, சவாலை ஏற்று தேர்தலிலே போட்டியிட்டவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பின்னர் இரண்டுமாத காலத்துக்குள் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே தனியாகவும், கூட்டாகவும் குறைந்தது பத்துக் கட்சிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து போட்டியிட்டன. அன்று தேர்தலை அறவே வெறுத்த எல்.ரி.ரி.ஈ. இயக்கம் கூட, தாம் தேர்தலில் பங்குபற்றுவதாக கூறுகின்ற அறிக்கைகளை நாம் இங்கு இன்று காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்த நிலையை உருவாக்குவதற்கு வடக்கு கிழக்கில் முக்கிய கர்த்தாக்களாக இருந்தவர்கள் நாம் என்பதை பலர் இங்கு மறந்து விட்டார்கள். அந்த நிலையை உருவாக்குவதற்காக பல தியாகங்களைச் செய்தோம். எம்முடைய 300 உறுப்பினர்களை கொலை செய்தார்கள். அப்படிப் பாடுபட்டுப் பங்கெடுத்த எமக்கு இந்த அரசு தந்திருக்கும் அரசு கொலைகாரர்கள் என்ற பட்டம்.

திருகோணமலையில் ஒரு குண்டுவெடிப்பு ஏற்பட்டது. அந்தக் குண்டு

வெடிப்புக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிதான் காரணம் என்று கூறப்பட்டது. கௌரவ அமைச்சர் அவர்கள் உடனடியாக தொலைக் காட்சியிலும் தோன்றி "ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிதான் குண்டு வைத்தது என்று மக்கள் கூறுகின்றார்கள்" என்று கூறினார்

இந்த நாட்டிலே உளவுப்படை இருக்கிறது. பலகோடிக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பாதுகாப்புப் பிரிவை நடாத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் பொறுப்பற்ற முறையில் "மக்கள் சொல்கிறார்கள்" என்று அமைச்சர் கூறினார்.

ஆனால் அண்மையில் ஜே.வி.பி. இயக்கத்தைச் சேர்ந்த விமலரத்ன என்பவர்தான் அந்தக் குண்டை வைத்தார் என்று கூறியதன் மூலம் அமைச்சர் அவர்கள் முன்னர் கூறியதை மறுதலித்துள்ளார்.

இப்பொழுது மக்கள் மத்தியில் தமிழ்தேசிய இராணுவம் சட்டபூர்வமற்ற இராணுவம் எனக் கூறப்படுகின்றது. தமிழ்தேசிய இராணுவம் சட்டபூர்வ இராணுவமா?? சட்டபூர்வமற்ற இராணுவமா?? என நான் இங்கே விவாதிக்க வரவில்லை.

ஆனால் அது சட்டபூர்வமற்ற இராணுவம் என்றும், அதனைத் தங்களுக்கு அடையாளம் காட்டித் தந்தவர்கள் விடுதலைப் புலிகள் என்றும் கூறப்படுகின்றது. எல்.ரி.ரி.ஈ. திருக்கோவிலிலும், தம்பிலுவிலும் தாக்குதலை மேற்கொண்டதன் மூலம் பல ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் அழகாகப் பத்திரிகைகளிலே படம் போட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

யார் இந்த விடுதலைப் புலிகள்?? அவர்கள் சட்டபூர்வமான இராணுவத்தினரா?? ஒரு சட்டபூர்வமற்ற இராணுவத்தை தடைசெய்ய வேண்டுமாக இருந்தால், சிறிலங்கா அரசு சட்டபூர்வமான முறையிலே நடந்து கொள்ள வேண்டும். சிறிலங்கா அரசு சட்டபூர்வமற்ற இராணுவம் என்று தாம் கூறும் தமிழ்தேசிய இராணுவத்தை அடக்குவதற்கு இன்னுமோர் சட்டபூர்வமற்ற இராணுவத்தை செயல்பட விடுகின்றது.

சிலவேளை தென்னிலங்கையில் பழக்கப்பட்ட பழக்கதோஷமோ தெரியவில்லை. ஜே.வி.பி. என்ற சட்டபூர்வமற்ற இராணுவத்தை அடக்குவதற்கு **Green Tigers, PRRA** போன்ற சட்டபூர்வமற்ற இராணு

வம் இயக்கப்பட்டது என்றுதான் நினைக்கிறேன். அதே பாணியில் எமது பகுதியிலும் நடாத்தப்படுகின்றது. நீங்கள் சட்டபூர்வமான இராணுவமாக எல்.ரி.ரி.ஈ.யைப் பயன்படுத்துங்கள். பணம் கொடுக்கிறீர்கள், ஆயுதம் கொடுக்கிறீர்கள். கொடுக்கப்படாதது சீருடை ஒன்றுதான். அதையும் கொடுத்து வடக்கு கிழக்குக்கு அனுப்புங்கள்.

எமது மாகாண அரசின் முதலமைச்சர் அவர்கள், இனவிகிதாசார அடிப்படையில் சேர்க்கப்பட்ட படையில் உள்ள அந்தக் (புலிகள்) தமிழ் இராணுவத்தை வடக்கு கிழக்குக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன் அடிப்படையில் நீங்கள் அவர்களை சட்டபூர்வமான இராணுவமாக்கினால் நாம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல கடந்த வாரம் இந்த அரசு ஈரோஸ் இயக்கத்திற்கு ஆயுதம் வழங்கியுள்ளது. இதன் நோக்கம் என்ன?? தமிழ் இயக்கங்களிடையே, தமிழ் கட்சிகளிடையே மோதலை உருவாக்குவதற்கு இந்த முறையான அணுகுமுறைகள் பின்பற்றப் படுகின்றன. இதற்குக் காரணம் என்ன??

இந்த நாட்டிலே ஜனநாயகம் உருவாக வேண்டும். அமைதிக்காக சமாதானத்திற்காக போராட வேண்டும் என்று முன்வந்த எமக்கெதிராகப் பலதிசைகளிலும் ஆயுதங்கள் கொடுத்து சட்டபூர்வமற்ற முறையில் நீங்கள் நடக்கிறீர்கள் என்றால் இந்தச் செயற்பாடுகளுக்கு காரணம் என்ன???

இந்த அரசு திட்டமிட்டு தமிழ்பேசும் மக்களுடைய உரிமைகளைக் கொடுக்காமல் தமிழ்பேசும் மக்களைப் பிளவுபடுத்தி அவர்கள்மீது தனது இனவாதப் போக்கை கட்டவிழ்த்துவிடப் பார்க்கின்றது. எம்முடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நாங்கள் இங்கிருந்து இந்தியா செல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. இந்த நாட்டிலே நாம் அமைதியை உருவாக்கினால்தான் அயல்நாடுகள்கூட எம்முடன் உறவாக இருக்குமென்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.

இன்றைய கௌரவ சபாநாயகர் அவர்கள் அன்று போக்குவரத்து அமைச்சராக இருந்த போது போக்குவரத்து சம்பந்தமாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கியிருந்தார். அதுபோல் முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சரவர்களும், முன்னாள் கல்வி அமைச்சர் அவர்களும், கௌரவ அமைச்சர் இராசதுரை அவர்களும் அவ்வாறு

அதிகாரங்களை வழங்கியிருந்தனர். ஆனால் புதிய அமைச்சரவை பாரமேற்றவுடன் அவைகள் மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இது எதைக் காட்டுகின்றது. தமிழ்பேசும் மக்களுக்கு இந்த அரசு ஏதாவது செய்ய முற்படுகிறதா என்பதைத்தான் நான் இங்கு கேட்க விரும்புகிறேன்.

எல்.ரி.ரி.ஈ.ஆக இருந்தாலும் சரி, ஈரோசாக இருந்தாலும் சரி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆக இருந்தாலும் சரி, ஈ.என்.டி.எல்.எவ். ஆக இருந்தாலும் சரி எந்த இயக்கமாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் இம்முறை ஏமாறத் தயாராக இல்லை என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் எமது மக்களால் தெரிவு செய்யப்பட்டோம். முன்னர் இடமாற்றங்களுக்கும், பதவியுயர்வுகளுக்குமாகத் தெரிவுசெய்யப்பட்டது போல் இம்முறை நாம் தெரிவுசெய்யப்படவில்லை. தமிழ்பேசும் மக்களுடைய அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர்கள் எங்களை இந்தச் சபைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

ஏனைய சில உறுப்பினர்களைப்போல் வாகனங்களுக்காகக் கொடுக்கப் படும் 15,000 ரூபாவுக்காவும், எனது சம்பளத்துக்காகவும் நானும் இங்கு பேசாமல் இருந்துவிட்டுப் போகலாம். மக்கள் எம்மீது சுமத்தியுள்ள கடமையைச் செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் இந்தச் சபையிலே இதனை எடுத்துக் கூறுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் இன்றும் இந்த அரசு தமிழ்பேசும் மக்களை இந்தநாட்டின் பிரஜைகளாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இன்று மாகாணப் பொலிஸ்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்த விவாதத்திற்கூட மாகாண பொலிஸ் படையை மாகாண சபைகளுக்கு கொடுப்பதாக முடிவு செய்யவில்லை. மாகாண பொலிஸ்படையை பற்றி இங்கு விவாதிக்க வேண்டுமே தவிர அவர்களின் அதிகாரங்களையும், கடமைகளையும் பற்றி மாகாண சபையிலேயே விவாதிக்க வேண்டும். ஆனால் கொடுத்ததை எப்படித் திருப்பி எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காகத்தான் இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டிலே நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமாக இருந்தால், மக்கள் எல்லோரும் இலங்கைப் பிரஜைகள் என்ற மனப் பான்மையுடன் வாழவேண்டுமாக இருந்தால், தமிழ்பேசும் மக்களுக்கு

கொடுக்க வேண்டிய அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இத்தனை வருடங்களை காடுகளிலும், போராட்டங்களிலும் செலவிட்ட பின்பு நாங்கள் மீண்டும் பழைய நிலையில் வாழ்வதாக இருந்தால் எந்த நிலையில் வாழமுடியும்??

தமிழ்பேசும் மக்கள் நம்பிக்கையிழந்திருக்கின்ற இந்த வேளையில் நீங்கள் அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து தமிழ்பேசும் மக்களின் நன்னம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும். நீங்கள் சுருக்கமாகப் பழிகளை தமிழ்பேசும் மக்களின் தலைவர்கள் மீது போட்டு விடுவது வழக்கம்.

இனியாவது நீங்கள் பழிகளை தமிழ்பேசும் மக்களின் தலைவர்கள் மீது போடுமுன் நான் சொல்வதை நீங்கள் சற்றே கேட்க வேண்டும். நாம் என்ன செய்கிறோம்?? இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக நாங்கள் உண்மையாக உழைக்கிறோமா?? இந்த நாட்டில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப நாங்கள் பாடுபடுகிறோமா?? என்று ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்.

தமிழ் பேசும் மக்கள் உங்களுடன் சேர்ந்து ஒருங்கிணைந்து வாழ வேண்டுமாக இருந்தால் அதில் எவருக்குமே கருத்து வேற்றுமை இருக்க முடியாது. எங்களுக்குரிய அடிப்படை உரிமைகளை மாகாண சபைகள் மூலம் தாருங்கள். மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுத்து தமிழ்பேசும் மக்களை வென்றெடுங்கள்.

# துப்பாக்கியினால் பூட்டப்பட்ட ஜனநாயகக் கதவுகள்

***பாராளுமன்றத்தில் திரு.அமிர்தலிங்கம் அவர்களின் மறைவையொட்டி (22.09.1989) ஆற்றிய அஞ்சலி உரை.***

அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் 1949 ஆம் ஆண்டு தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த நேரத்திலே ஒரு போராட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டிய நிலையிலேதான் ஆரம்பித்தார்.

அதாவது அன்று குடியுரிமைச் சட்டத்தின் மூலம் மலைநாட்டு மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட போது, அகில இலங்கைத் தமிழ் காங்கிரசிலிருந்து பிளவுபட்டுத் தந்தை செல்வா அவர்களின் தலைமையின் கீழ் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலே அவர் தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

அன்று அரசியலில் புகுந்த அவர் 1956 ஆம் ஆண்டிலே பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலங்களிலும், அதற்கு முன்னரும் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் பல போராட்டங்களிலே கலந்து கொண்டார். இவ்வேளைகளில் பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் பலதடவை தாக்கப்பட்டார்.

அவர் பாராளுமன்றத்திலே எதிர்கட்சித் தலைவராக இருந்த சந்தர்ப்பத்திலும் 1981ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே இராணு வத்தினரால் தாக்கப்பட்டார். அத்துடன் பல தடவைகள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலிலும் இருந்தார்.

அவரது அரசியல் ஆற்றலினாலும், தமிழ்பேசும் மக்கள் அவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையினாலும், அதுவரை வடக்கு கிழக்கு அரசியலின் தலைமையைக் கொழும்புக் கறுவாக் காட்டிலிருந்து கொடுத்துக் கொண்டிருந்த நிலையை மாற்றி, அதனைப் பண்ணாகத்திலிருந்தும் கொடுக்கலாம் என்றொரு நிலையை உருவாக்கியவர் அவர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அவர் இன்று எம்மிடையே இல்லை. ஆனால் அவர் இறக்கும்போது ஒரு தனி அமிர்தலிங்கமாக இறந்திருக்கின்றார் எனினும் பல தலைவர்களை எமக்கு உருவாக்கிவிட்டுத்தான் சென்றிருக்கின்றார்.

இன்றைய கட்சிகளின் தலைவர்களை எடுத்துக் கொண்டால், எமது கட்சியின் தலைவர் தோழர்.க.பத்மநாபா என்றாலும் சரி, ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் தோழர்.இரத்தினசபாபதி என்றாலும் சரி, ஈ.என்.டி.எல்.எவ்.இயக்கத்தின் தலைவர் திரு.இராஜன் என்றாலும் சரி, ரெலோ இயக்கத்தின் தலைவர் திரு.செல்வம் என்றாலும் சரி, வடக்கு கிழக்கு மாகாண அரசின் தலைவர் தோழர்.வரதராஜப் பெருமாள் என்றாலும் சரி, ஏன் இவரைக் கொலை செய்த இயக்கத்தின் தலைவர்களான பிரபாகரன், மாத்தையா என்றாலும் சரி அனைவரும் அமரர் அமிர்தலிங்கத்தின் அரவணைப்பிலேயே வளர்ந்து தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது.

1983 ஆம் ஆண்டு இந்நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் பாராளுமன்றப்பதவியை இராஜினாமாச் செய்த, இந்தியா சென்றிருந்த அக்காலகட்டத்திலே சகல இயக்கங்களையும் ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வருவதற்காக அவர் அரும்பாடு பட்டார்.

ஆனால் அவரால் அதனை முற்றுமுழுதாக ஏற்படுத்த முடியவில்லை. குறைந்த பட்சம் மூன்று இயக்கங்களையாவது பட்டியலில் போட்டு அவை தேர்தலில் போட்டியிடக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை அவர் உருவாக்கினார்.

இத்தடவை அவர் பாராளுமன்றத்திலே பிரசன்னமாக இருந்த போது அவரிடத்தில் ஒரு தனி உத்வேகத்தையும், தனித் தன்மை யையும் காணக்கூடியதாக இருந்தது. நாமும் அவருடன் இந்தப் பாராளுமன்றத்திலே இருக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பலதடவைகள் எதிர்கட்சிக் கூட்டங்களிலே அவருடன் நான் சென்று கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் அங்கே எல்லோருக்கும் அறிவுரை கூறுபவராகவும், ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்ற போட்டியில்லாது நாட்டின் நன்மைக்கான நல்ல முடிவுகளுக்கு வர ஒரு பாலமாகவும் செயற்பட்டார்.

சுருக்கமாகக் கூறப் போனால் அவர் தமிழ்பேசும் மக்களின் தலைவராக மட்டுமல்லாது, ஒரு தேசியத் தலைவராகவே இச்சபையில் நடந்து கொண்டார். அவரைக் கொலை செய்தவர்கள் இந்த நாட்டிலே நடந்து கொண்ட விதத்தையும், இச்சபைக்கு அவர் ஆற்றிய பணிகளின் முக்கியத்துவத்தையும், உணர்ந்து அப்பொழு தாவது தமது முடிவை மாற்றியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

மாகாண சபைத் தேர்தல்களின் போது "நீங்களும் தேர்தலில் போட்டியிட வேண்டும்" என்று நாம் அவரைக் கேட்டிருந்தோம். அச்சமயம் அவர் எமக்கு கூறிய வார்த்தைகளை உங்கள் கவனத்திற்காக எடுத்துக் கூறுவது எமது கடமையாகும். அவர் சொன்னார்,
"ஜனநாயகத்தின் கதவுகள் துப்பாக்கிகளின் முனைகளால் பூட்டப் பட்டிருக்கின்றன. எந்த இயக்கங்கள் துப்பாக்கியை தூக்கினவோ அந்த துப்பாக்கியை தூக்கிய இயக்கங்களே இந்த ஜனநாயகத்தின் கதவுகளை மீண்டும் அதே துப்பாக்கியால் திறக்க வேண்டும்." என்று

மாகாணசபைத் தேர்தல்கள் முடிந்து, பாராளுமன்றத் தேர்தல்கள் வந்த போது, எமது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) எந்தத் துப்பாக்கியினால் ஜனநாயகத்தின் கதவு பூட்டப் பட்டிருந்ததோ, அந்தத் துப்பாக்கியினால் மீண்டும் ஜனநாயகத்தின் கதவை திறந்திருக்கின்றது. நாம் எல்லோரும் இனிமேல் ஜனநாயக நீரோடையில் கலந்து கொள்ள வேண்டும் என்று முன் வந்துள்ளோம்.

ஜனநாயகத்தை இந்நாட்டிலே உருவாக்குவதற்காக, ஜனநாயகத்தை இந்நாட்டிலே காப்பாற்றுவதற்காக அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் முன்வந்த காரணத்தினால்தான் அவர் கொல்லப்பட்டார். இந்த நிலமை மீண்டும் தொடரக்கூடாது. ஜனநாயக வாதிகளுக்கு இந்நாட் டிலே சுதந்திரமாக நடமாடுவதற்கு வழிஅமைத்துக் கொடுத்து ஜனநா யக நீரோடையில் கலந்து கொள்ள வைக்கவேண்டும். இதுபோன்ற கொலைகளைப் புரிவோரை மக்கள்முன் அம்பலப்படுத்துவதற்கு விசா ரணை நடாத்த விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இச்சபையில் வடக்குக் கிழக்கிலிருந்து வந்திருக்கின்ற இளம் உறுப்பினர்களாகிய எம்போன்றவர்களுக்கு இன்று வழிகாட்டிக் கொண்டிருக்க வேண்டிய நேரத்தில் அவர் இங்கு இல்லை. அவர் பணியை நாம் ஒன்று சேர்ந்து பூரணப்படுத்த வேண்டும்,

# தமிழ்பேசும் மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டால்...?

## 89ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் ஆற்றிய உரை

இன்று இந்த நாட்டிலே மலிந்து கிடப்பதெல்லாம் பயங்கரவாதம், வேலையில்லாத் திண்டாட்டம், பாடசாலையில் கல்வி கற்க முடியாத நிலை, வறுமை இவைகள்தான்.

இந்த நிலை உருவாகுவதற்கு காரணம் என்ன?? பதினொரு வருடங்களுக்கு முன்னர் சரியானதொரு பொருளாதாரக் கொள்கையை முன்வைத்திருந்தால் நாடு வித்தியாசமான சூழ்நிலையில் இன்று இருந்திருக்கும்.

நிதியமைச்சர் அவர்கள் இந்த நாட்டின் இளம் சமுதாயத்திற்கு போஷாக்கு இல்லையென்றும் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு போஷாக்குள்ள மதிய உணவு கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

போஷாக்கைப் பற்றிக் கதைக்கும் போது முன்பு இலவசமாகக் கொடுக்கப் பட்ட அரிசி, பருப்பு போன்றவற்றை ஏன் பறித்துக் கொண்டார்கள் என்பதுதான் புரியவில்லை.

அப்படி இலவசமாகக் கொடுத்ததை பறித்து விட்டு உணவு முத்திரை கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த உணவு முத்திரை எந்தளவு தூரம் வறியவர்களை சென்றடைந்தது என்பது கேள்விக் குறிதான். உணவு முத்திரையில் பலவிதமான மோசடிகள் செய்யப் பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் அரசின் கட்டுப்பாடு நிர்வாகத்தில் ஸ்திரமாக இல்லாதிருப்பதே.

எந்தவிதமான திட்டத்தையும் அமுல் நடத்துவதற்கு கட்டுப்பாடான ஸ்திரமான நிர்வாகம் வேண்டும் இல்லையானால் திட்டங்கள் வெற்றியளிக்காது.

நாட்டில் உள்ள அமைதியற்ற சூழ்நிலை இன்று நேற்று தோன்றியதல்ல. ஆங்காங்கே சிலவருடங்களுக்கு ஒருமுறை மூண்ட குழப்பங்கள் 1971இல் ஒரு வித்தியாசமான சூழ்நிலைக்கு தள்ளப்பட் டன. இன்று எதிர்கட்சி ஆசனங்களில் இருப்பவர்கள் இந்த நாட்டை ஆண்ட வேளையில் வன்முறை முதல் முதலாக தலை தூக்கியது.

அன்று தலைதூக்கிய வன்முறைக்கு சுதந்திரக் கட்சியினரோ, ஐக்கிய தேசியக் கட்சியினரோ நாட்டின் எதிர்கால நலன்கருதி ஒரு முழுமையான தீர்வையிட்டு சிந்தித்திருப்பார்களேயானால், ஒரு முழுமையான தீர்வை முன்வைத்திருப்பார்களேயானால் ஜே.வி.பி.யின் பிரச்சனை முற்றுமுழுதாகத் தீர்க்கப்பட்டிருக்கும்.

அதற்கு மாறாக உங்களிடம் இருந்துவந்த கட்சி விரோதங்கள், உங்களிடமிருந்த அற்ப பாராளுமன்ற ஆசை ஒரு உரிய தீர்வை நோக்கி உங்களைக் கொண்டு செல்லவில்லை. பொறுப்புணர்சியுடன் நீங்கள் அன்று செயற்பட்டிருந்தால் மக்கள் இன்று இந்தத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியேற்பட்டிருக்காது.

இச்சபைக்கு வந்திருக்கும் உறுப்பினர்கள் கட்சிபேதம் பாராது, தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் என்றுஇனவேறுபாடு காட்டாது, இது எமது நாடு இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும். இந்த நாட்டில் வாழும் யாவரும் எமது சகோதரர்களே. அவர்களது வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். பிரதேச வேறுபாடு பாராது எமது வளங் களைப் பெருக்க வேண்டும். என்ற நோக்கம் கொண்டால் மட் டுமே ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்ல முடியும்.

இந்த நாட்டை மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்களின் அற்ப புத்தியினால்தான் ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவானது. 1972 இல் தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டபோது இந்நாட்டில் ஏற்படக்கூடிய அபாயகரமான விளைவுகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எடுத்துக் கூறியும் அதற்கு அரசாங்கம் செவி சாய்க்காத காரணத்தால் இந்த நாடு எத்தனை ஆயிரம் உயிர்களை இழந்திருக்கிறது. எத்தனை கோடிரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. இந்தப் பாரதூரமான நிலை குறித்து இன்று கூட எவரும் யோசிப்பதாக இல்லை.

இப்படியான இழப்புக்கள் தமிழ்பேசும் மக்களுக்கு நேர்ந்திருந்த போதிலும், நாம் எவ்வளவோ சகிப்புத் தன்மையுடன் நாட்டை வளமாக்கவே விரும்புகிறாம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசுகளினால் பல இன்னல்கள் இழைக்கப்பட்ட பின்பும் அவற்றையெல்லாம் பொறுத்து, நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும், ஒற்றுமை நிலைபெறச் செய்ய வேண்டும், இந்த மண்ணில் மீண்டும் ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இலங்கை இந்திய சாமாதான உடன்படிக்கை

எங்களது முழு அபிலாசைகளையும் பூர்த்தி செய்யாதிருந்தும்கூட அதை ஒரு அடிப்படையாக ஏற்றுக் கொண்டோம். அதற்கு முரண்பாடாக இங்கிருக்கும் எதிர்கட்சியினரும், ஆளும் கட்சியினரும் நடந்து கொள்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் இந்திய இராணுவம் வந்து விட்டதென கூக்குரலிடும் இவர்கள் தாம் செய்யும் செயல்களினால் இந்திய இராணுவம் தென்னிலங்கைக்கும் வராதபடி நடந்து கொள்வார்களேயாயின் அதுவே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

வடக்கு கிழக்கு மாகாண முதல்வர் முப்பது கடவைகள் கொழும்புக்கு விஜயம் செய்ததை பிரசுரிக்க முடியாத சில பத்திரிகைகள் அவர் இந்தியா சென்று இந்தியப் பிரதமருடன் தனது மக்களின் குறையைச் சொன்னதற்காக ஓலமிடுகின்றன. இவர்கள் தமது பத்திரிகைத் தர்மத்தை உணர்ந்து வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்குத் தேவையான அதிகாரப் பரவலாக்கலை அரசு துரிதப்படுத்த வேண்டும் என்று கூறுவார்களேயாயின் பாராட்டப்பட வேண்டியவர்கள்தான்.

எமது வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த போராட்டக் காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிதிகள் இன்னமும் முற்றாகக் கொடுபடவில்லை. வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலில் 2000 ரூபாவும், பின்னர் 1000 ரூபாவும் கொடுக்கப்பட்டது. அதுதவிர செய்தொழில் நஷ்டம் என்ற வகையில் மீனவர்கட்கும், விவசாயிகளுக்கும் 4000 ரூபா கொடுக்கப்பட்டது.

இந்தப்பணம் எவ்வளவு தூரம் உண்மையாகப் பாதிக்கப் பட்டிருப் பவர்களுக்கு போய்ச் சேர்ந்திருக்கின்றது என்பது கேள்விக்கு ரியதாகும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியாக வெளிநாடுகள் இதுவரை இலங்கைக்கு தருவதாக உறுதியளித்த தொகை 52 கோடியே 70 இலட்சம் டொலர்களாகும். இதில் 30 இலட்சம் டொலர்கள் நிச்சயமாகத் தரப்படும் என உத்தரவாதமும் அளிக்கப்பட்டது.

அவர்கள் உத்தரவாதமளிக்கும்போது ஏற்படுத்திக் கொண்ட உடன் பாட்டின் பிரகாரம் இந்த அரசானது தனது தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 20 சத வீதத்தை புனர்வாழ்வு புனர மைப்பு நட-

வடிக்கைகளுக்கு ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்ட நிதியாக ஒதுக்க வேண்டிய தொகை 1200 கோடி ரூபாய்களாகும் ஆனால் இந்நிதியில் 1989 ம் ஆண்டுக்கு மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏறக்குறைய 20 கோடி 60 இலட்சம் ரூபாய்கள் மட்டுமே.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் கொடுக்கப்பட்ட தொகை 33 கோடி ரூபாவாகும். மூன்று வருடங்களுக்கு 1200 கோடி ரூபாய்களானால் ஒரு வருடத்துக்கு குறைந்த பட்சம் 400 கோடி ரூபாவாவது வடக்கு கிழக்குக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இங்கு எமக்குத் தரப்பட்ட உத்தேச மதிப்பீட்டின்படி ஏறக்குறைய 460 கோடி ரூபாவே 89 ஆண்டுக்கு உத்தேசமிடப்பட்டுள்ளது. இந்நிதி எப்படி வடக்கு கிழக்குக்கு செலவு செய்யப்படப் போகின்றது என்பது பற்றி எதுவிதத் தரவுகளும் கிடையாது.

இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை தமிழ்பேசும் மக்களுடைய பூரண அபிலாசைகளையும் நிறைவேற்றவில்லை. தமிழ்பேசும் மக்களின் சம்மதம் பெறப்படாமலே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இரண்டு வருடங்கள் கழிந்து விட்ட பின்னரும் உடன்படிக்கை எதைச் சாதித்தது????

மீண்டும் எம்மினம் ஏமாற்றப்படுமாயின் இந்த நாடு எப்படியான சூழ்நிலையை எதிர்நோக்குமென்பதை இந்தச்சபையிலுள்ள ஆளுங்கட்சியினரும், எதிர்கட்சியினரும் தூரதிருஷ்டியுடன் தெளிவாக நோக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெறும் மிரட்டலுக்கும், கூக்குரலுக்கும் இடம் வேண்டுமென்பதற்காக நான் இதைக் கூறவில்லை. எம்மைப் பொறுத்த வரையில் நாம் எமது மக்களுக்கு ஒரு அமைதியான வாழ்வையும் சமாதானத்தை வழங்கும் நோக்குடனும், இழந்த பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்பதற்காகவும் திரிகரண சுத்தியுடன்தான் இச்சபைக்கு வந்திருக்கிறோம் என்பதை இச்சபையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

# அதிகாரப் பரவலாக்கல்தான் அமைதிக்கு வழி வகுக்கும்.

**பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சின் வாக்குப் பணம் மீதான குழுநிலை விவாதத்தில் (10.04.89) பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை.**

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சின் வாக்குப் பணம் மீதான குழுநிலை விவாதத்தில் சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். முக்கியமாக மாகாணசபைகள் பற்றிய சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும்.

இந்தநாட்டில் யுத்தத்தின் விளைவாக மாகாணசபை முறையொன்று அறிமுகமாகியுள்ளது. இந்தநாட்டில் இருந்துவந்த இனப்பிரச்சனைக்கு இந்த மாகாணசபையே தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்டது. இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அரசியல் சாசனத்தில் ஒரு மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என்றும் அப்படிக் கொண்டு வரப்படுவதன் மூலமே சிறுபான்மை இனத்தினது பிரச்சனைகள் முற்றாகத் தீர்க்கப்படும் என்றும் கூறப்பட்டது. அது உண்மைதான்.

ஆனால் தமிழ்பேசும் மக்களுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையே நடந்து வந்த யுத்தத்தின் விளைவாக இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் ஒரு சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்தச் சமாதான உடன்படிக்கையின் மூலம் தமிழ்பேசும் மக்களது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மாகாணசபை ஒரு தீர்வாக வைக்கப்பட்டது.

இந்த மாகாணசபை முறையை நடைமுறைப் படுத்துவதற்காக அவசர அவசரமாக அரசியல்சாசனத்தில் 13 ஆவது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தின்படியே இன்று மாகாண சபைகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இக்கட்டத்தில் ஆளுங்கட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் நான் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள் நீங்கள் மாகாணசபை முறையை உருவாக்கும் போது உண்மையா

கவே இனப்பிரச்சனைக்கு தீர்வாகத்தான் அதனை உருவாக்கினீர்களா. அல்லது அதற்கு மாறாக ஒரு போகடி போக்குத்தனமாக, ஓர் அர்த்தமற்ற முறையில் மாகாண சபைகளை அமைத்தீர்களா? இதுதான் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விடயமாகும்.

எம்மைப் பொறுத்தவரையில் இதுவெறும் கண்துடைப்பு என்பதை மட்டும் எம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. இதை நாம் இன்று அறிந்துகொள்ளவில்லை. என்று இந்த சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதோ அன்றே இதை நாம் அறிந்துகொள்ள முடிந்தது.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டிய நேரத்தில் நீங்கள் எவ்வளவு தூரம் அதனை புறக்கணித்து நடத்தினீர்கள்? எவ்வளவு தூரம் அத்தேர்தலை நடத்துவதில் இழுத்தடிப்புச் செய்தீர்கள்? ஏன், உங்களுடைய அன்றைய அமைச்சர் ஒருவரும் கூட தொலைக்காட்சியில் தோன்றி, இத்தேர்தல் நடைபெறுமா என்று கூடக்கேட்டார்.

இவை நாம் ஏற்கனவே கொண்ட கருத்தை ஊர்ஜிதப்படுத்துவனவாக இருந்தன. நிலைமை இவ்வாறிருந்தும் நாம் அன்று இத்தேர்தலில் போட்டியிட்டோம். எப்படியாவது நாம் பதவிக்கு வந்துவிடவேண்டும் என்பதற்காகப் போட்டியிடவில்லை.

நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள் என்று தெரிந்தும் ஏன் போட்டியிட்டோம் என்ற கேள்வி யாருக்கும் எழக்கூடும் எமது தேசத்தைப் பொறுத்தவரையில், எம்மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒரு சமாதான சூழ்நிலை தேவைப்பட்டது. நிர்வாகத்தை சீர்செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வழியைத் திறக்கவேண்டிய நிலைமை தேவைப்பட்டது. எம் மக்களின் அன்றைய தேவைகளைச் சகலரும் அறிந்திருந்தும், அவற்றைப் பூர்த்திசெய்ய எல்லோரும் திராணியற்று இருந்த வேளையில், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் அவர்களது தேவையை உணர்ந்து, அன்றிருந்த சகல சவால்களையும் ஏற்று தேர்தலில் போட்டியிட்டோம்

நாம் வெற்றியும் கண்டோம். நவம்பர் மாதம் 19 ஆம் திகதிய தேர்தல் மூலம் எம் மாகாணசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். சம்பிரதாயப்படி மாகாணசபை ஆட்சி அன்றிலிருந்து ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும்.

கடந்த 7 ஆம் திகதி ஜனாதிபதி அவர்களது காரியாலயத்திற்கு வந்த அறிக்கை ஒன்று "இதுவரை மாகாணசபை இயங்குவதற்கு தேவையான சட்டம் நிர்வாக ஒழுங்கு என்பனவற்றை மத்திய அரசு செய்து முடிக்கவில்லை." என எடுத்துக் காட்டியது.

கேவலம் தென்னிலங்கையில் மாகாண அரசுகளினது ஆட்சி தொடங்கி ஏறக்குறைய எட்டு மாதங்களாகின்றன. இதுவரை காலமும் அவை செயற்படுத்துவதற்கான ஓர் ஒழுங்குமுறை ஆரம்பிக் கப்பட வில்லையானால் அதனை நாம் எப்படி வர்ணிப்பது??

மாகாண அரசுகள் இயங்குவதில் அக்கறை இருப்பதாக மட்டும் சொல்லுவது திருப்தியாக அமைந்து விடாது. அதற்குமாறாக அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

நாம் இங்கே மாகாண அரசு என்று கூறும்போது பலருடைய நெஞ்சங்கள் விறைத்து விடுகிறது என்பதை என்னால் உணர முடிகிறது. உங்களுக்கு நெஞ்சங்கள் உறைந்து போகிறது என்பதற்காக, உங்களுக்கு புரிந்துணர்வுகள் இல்லை என்பதற்காக நானும் ஓர் குழந்தைப் பிள்ளைத் தனமாகப் பேசிவிட்டுப் போய்விட முடியாது.

இந்தச் சபையில் மாகாண அரசு என்பது பற்றி ஒரு கேள்வி எழுப்பப் பட்டதும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து பதில் அளிக்கப்பட்டதும் ஒரு வேடிக்கையாக இருக்கிறது. இந்தச் சபையிலே இருப்பவர்கள் யாவரும் கலாபண்டிதர்களாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. நாமும் மனிதர்கள்தாம். இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டிய விடயங்கள் பல உண்டு என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஆனால் ஒன்றைத் "தெரியாது" என்று சொன்னால் அதைத் தெரியாது என்று ஒப்புக் கொண்டு அதனைத் தெரிந்து கொள்வதுதான் சாலச் சிறந்தது என்று நினைக்கிறேன். அதற்கு மாறாக எமக்குத் தெரியாத ஒரு விடயத்திற்கு புது விளக்கம் கொடுத்து எம்மையும் எம்மைத் தலைவர்களாக நம்பியிருக்கும் மக்களையும் குழப்புவது புத்திசாலித்தனமாகாது.

ஒரு நாட்டில் ஒரு அரசுதான் இருக்கலாம் என மாகாண சபைக

ளுக்குக் கூறப்பட்டுள்ளது. இந்தக் கூற்றைக் கூறியவருக்கு இதனை எந்தப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கூறிவைத்தாரோ எனக்குத் தெரியவில்லை.

உங்களது நேசசக்தியான அமெரிக்க நாட்டிலே 53 மாகாண அரசுகள் செயற்படுகின்றன. எமது நாட்டுக்குப் பக்கத்திலிருக்கும் இந்தியாவில் 25 மாநில அரசுகள் செயற்பட்டு வருகின்றன. சோவியத் யூனியனில் 15 குடியரசுகள் செயற்பட்டு வருகின்றன.

உலக நாடுகளிலே இப்படி இருக்கும் போது, எமது நாட்டிலே பொறுப்பு வாய்ந்தவர்கள் கூறுகிறார்கள். ஒரு நாட்டுக்கு ஒரு அரசுதான் என்று. தயவு செய்து இதுபோன்ற விடயங்களில் உங்களுக்குத் தெளிவு இல்லையாயின் ஒரு நல்ல விரிவுரையாளரிடம் அறிவுரை கேட்பதில் தவறேதும் இல்லையெனக் கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்று மேடைமேடையாக ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் கூக்குரலிடுகின்றன. குழப்பங்கள் விளைவிப்பவர்களை ஜனநாயக வழிக்கு வரும்படி அறைகூவல் விடப்படுகின்றது. இந்த அரசு எந்த அறைகூவல் விடுத்தாலும் அதனால் இந்த நாடு அமைதி காணப் போவதில்லை.

உலகில் எப்பகுதியிலும் சரி, எதேச்சாதிகாரமும், ஜனநாயகமும் ஒன்றாக வாழமுடியாது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். உண்மையாகவே இந்த நாட்டில் ஜனநாயகத்தை உருவாக்க விரும்பினால், முதலில் முழுமையான முறையில் மாகாண சபைகளை விரைவில் இயங்க வைப்பதற்கு இந்த நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்களை நான் தமிழ் பேசும் மக்களிடம் அனுதாபம் காட்டும்படி கேட்கவில்லை. தமிழ்பேசும் மக்களுக்கு அற்ப சொற்ப உரிமைகளைத் தந்துதவுமாறு பிச்சை கேட்கவுமில்லை. இந்த நாடு உண்மையான அமைதியை நோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால், செல்ல வேண்டும் என்று விரும்பினால், இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும் என விரும்பினால் உடனடியாக மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களை பரவலாக்குங்கள் என்றுதான் கேட்கிறேன்.

சகல மாகாண சபைகளுக்கும் இந்த அதிகாரங்களைப் பரவாலக்கிக் கொடுப்பதன் மூலமே இந்த நாட்டில் ஒரு அமைதியான சூழ்நிலையையும், சமாதானச் சூழ்நிலையையும், ஜனநாயகச் சூழ்நிலையையும் உருவாக்க முடியும் என நான் திட்டவட்டமாக நம்புகிறேன்.

இந்தக் கட்டத்திலே நான் ஓர் உதாரணத்தை உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 19 ஆம் நூற்றாண்டில் ஐரிஸ் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அன்றைய காலத்தில் வாழ்ந்த தத்துவ வித்தகன் கார்ல்மாக்ஸ் என்ன கூறினார்??

"அயர்லாந்துப் போராட்டத்துக்கு பிரித்தானிய தொழிலாள வர்க்கம் முழுமையான ஆதரவைக் கொடுக்க வேண்டும்". என்று கூறினார். அந்த ஆதரவை அயர்லாந்து மக்களுக்குக் கொடுக்கும்படி அவர் கூறவில்லை. பிரித்தானியாவில் உள்ள தொழிலாள வர்க்கம் தனது விடுதலையைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தால் அயர்லாந்துப் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும். அதன்மூலமே பிரித்தானியத் தொழிலாளர்களது பிரச்சகைக்குத் தீர்வு காணமுடியும் என்று சொன்னார்.

இன்று தென்னிலங்கையில் தமது கட்சி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டாலும் அந்தக் கட்சியின் தலைவர்கள் இறந்த அந்த உறுப்பினருக்கு ஒரு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஏன் அவ்வளவு தூரம் செல்ல வேண்டியதில்லை. இந்தப் பாராளுமன்றத்துக்குள் வரும்பொழுதுகூட வாசலில் எத்தனை பேர்களை ஆயுதங்களுடன் இறக்கிவிட்டு வரவேண்டிய சூழ்நிலையில் நாம் உள்ளோம். இந்தத் துப்பாக்கி நாகரிகம் உங்களால், அதாவது இந்தச் சபையில் இருக்கும் ஆளுங்கட்சி, எதிர்கட்சியாகிய உங்களால் அன்று வடக்குக்கும் கிழக்குக்கும் உங்களால் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது.

ஆனால் இன்னமும் காலந் தாழந்து விடவில்லை. நீங்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று பாராது அதிகாரங்களைப் பரவலாக்கும் பட்சத்தில் மட்டுமே இந்த நாட்டிலே பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்படும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசானது தேசிய பாதுகாப்பு விவகாரம், வெளிநாட்டு விவகாரம், தேசியப் பொருளாதாரத் திட்டமிடல் போன்ற அடிப்படை விவகாரங்களைவிட, ஏனையவற்றை மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம்தான் ஒரு உண்மையான அதிகாரப் பரவலாக்கலை செய்ததாக இருக்கமுடியும் என்பதை இச்சபையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அதிகாரப்பரவலாக்கல் மூலம், தமிழ்பேசும் மக்களுக்கு அற்ப சொற்ப உரிமைகள் சென்றுவிடும் என நீங்கள் நினைத்துக் காமதகப் படுத்தும் ஒவ்வொரு நிமிடமும் இந்த நாட்டுக்கு பெரியதோர் அபாயம் உருவாகிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

இந்தக் கட்டத்தில் கடந்த காலத்தில் இந்தப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு விடயத்தை உங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நாட்டில் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை இந்தச் சபையில் கொண்டுவரப்பட்ட நேரத்தில், அன்றைய பாராளுமன்றத்தில் ஒர் உறுப்பினராக இருந்த காலஞ் சென்ற கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்கள் ஆற்றிய உரையில்,

"இந்த நாட்டில் ஒரு மொழி அரசகரும மொழியாக இருக்குமேயானால் இந்த நாடு இரண்டாகப் பிரிவதில் அதிசய மில்லை. இருமொழிகள் அரசகரும மொழியாக இருக்குமேயானால் இந்த நாடு ஒரு நாடாக இருக்கும்" என்று கூறினார். அவர் சொன்ன அந்தக் கூற்றில் பொதிந்துள்ள உண்மையை உணருவதற்கு உங்களுக்கு எத்தனை வருடங்கள் எடுத்திருக்கின்றன????

அதனையே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் ஒரு சிறு மாற்றத்துடன் இந்தச் சபையிலே கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

தற்போது தரப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்பத்தை நீங்கள் சரியாகப் நடைமுறைப்படுத்தத் தவறுவீர்களேயானால் இந்தத் தடவை இந்த நாடு இரண்டாக உடையப் போவதில்லை. அதற்கு மாறாக இந்த நாடு இரண்டுக்கு மேலாக உடையப் போகிறது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவற்றை உணர்ந்து இந்த நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளும்

செயல் படுவதன் மூலமே இந்த நாடு எதிர் நோக்கும் பேராபத்திலிருந்து தப்பித்தக் கொள்வதற்கு முடியும் என இந்தச் சபைக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில் முன்பு பிரதம அமைச்சர்களாக இருந்தவர்கள், தாம் எதிர்கட்சி ஆசனத்துக்கு வந்த பின்பு தாம் பிழை விட்டுவிட்டதாகக் கூறிக் கொள்ளும் அளவிற்கு பெருந்தன்மையானவர்களாக மாறிவிடுகிறார்கள். ஆனால் இனிமேல் அப்படியே தொடர்ந்து போகலாம் என்ற நிலைமாறி, ஒரு தீர்க்கமான முடிவை ஏற்றுச் செயல்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதனை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில் பொதுநிர்வாக அமைச்சு சாதித்து வருவது என்னவென்றால், அதிகார வர்க்கத்தினரை உருவாக்குவதுடன் அவர்களின் ஆளுமைக்கு சகல நிர்வாகங்களும் சிக்குண்டு தவிக்கச் செய்வது தான். அவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் பெரியதோர் இடைவெளி ஏற்பட்டுள்ளது. அதற்கான காரணம் அவர்களது செயற்பாட்டுக்கும், நடைமுறைக்கும் எதுவித தொடர்புமற்ற நிலையிருப்பதுதான்.

மக்கள் படும் இன்னல்களைக் கூட இந்த அதிகார வர்க்கத்தினரால் அறிந்து கொள்ள முடியவில்லை. மாகாண சபைகள், அதிகாரப் பரவலாக்கல் என்பற்றிலும் கூட இந்த அதிகார வர்க்கத்தின் இழுத்தடிப்புக்கள் நடைபெறுகின்றன.

இந்த நாட்டின் அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும், இந்த நாட்டு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மைக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களாவர். இந்த நாட்டின் அதிஉயர்ந்த ஸ்தானத்திலிருக்கும் அவர்களுக்கு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் அதனை இந்த அதிகார வர்க்கத்திலிருப்பவர்களே நடைமுறைப் படுத்துகிறார்கள்.

ஆனால் அவர்கள் பலவிடயங்களை நடைமுறைப் படுத்தாது முட்டுக் கட்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் தமிழ்மொழிக்கும் அரசகரும மொழியென்று அந்தஸ்த்துக் கொடுத்து ஒரு வருடமாகிறது. ஆனால் இதுவரை பொதுநிர்வாக அமைச்சானது அதனை நடைமுறைப் படுத்துவதற்கு எதுவிதமான சுற்றறிக்கைகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பவில்லை என்பதனை கௌரவ அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

# வீடெரிக்கும் அரசனுக்கு நெருப்புக் கொடுக்கும் மந்திரி

## மாகாசபைத் தேர்தல்கள் மனுக்கள் மீதான பாராளுமன்ற விவாதத்தில்....

நாட்டை ஒற்றுமையாக வழிநடத்திச் செல்ல உங்களால் முடியாவிட்டால் தயவுசெய்து எம்மை எம் வழியில் விட்டு விடுங்கள். தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை மாகாண அரசு நிறைவேற்றவில்லை. எமது பிரச்சனைகளுக்கு இடைக்கால தீர்வாகவே நாம் மாகாண அரசை ஏற்றுக் கொண்டோம். ஆனால் இன்று சுமார் ஒரு வருடமாகியும் வடக்கு கிழக்கு மாகாண அரசு அதிகாரமற்ற சபையாகவே உள்ளது.

இலங்கை இராணுவத்தினால் நிலமையை கட்டுப்படுத்த முடியாத தனாலேயே இந்திய அமைதிப்படை வந்தது. மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படுவது அவசியம் என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்திலேயே விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாகாண சபைகளுக்கு அதிகாரம் கொடுபடாத நிலையிலேயே இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும் எனக் கோரப்படுகிறது.

சட்டபூர்வமற்ற தமிழ்தேசிய இராணுவம் பற்றிக் கூறப்படுகிறது. மக்கள் தொண்டர் படைதான் கிழக்கில் உள்ளது. மூவாயிரம் பேர் கொண்ட மக்கள் தொண்டர் படையை ஏழாயிரமாக உயர்த்தலாம் என்று கடந்த பாதுகாப்புக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மக்கள் தொண்டர்படை முகாம்கள் மீது எல்.ரி.ரி.ஈ தாக்குதல் நடாத்தியுள்ளது. இப்படி நடக்குமென நமது முதலமைச்சர் முன்கூட்டியே அரசிடம் எடுத்துக் கூறியுள்ளார். போர்நிறுத்தம் உள்ளதால் எல்.ரி.ரி.ஈ. தாக்காது எனக் கூறப்பட்டது.

எல்.ரி.ரி.ஈ. தாக்குதலைத் தொடர்ந்து இன்று இராணுவம் அம்பாறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. எல்.ரி.ரி.ஈ.மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என இராணுவ அதிகாரியிடம் கேட்டபோது அதற்கான அதிகாரம் வழங்கப்பட வில்லை. எம்மைத் தாக்கினால் தாக்குவோம் என்றார். வீடெரிக்கும் அரசனுக்கு நெருப்புக் கொடுக்கும் மந்திரியின் நிலைபோன்றது இது. நாம் அரசின்மீது நம்பிக்கை இழந்து விட்டோம்.

# தமிழ்பேசும் மக்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அவசியம்

## பத்திரிகையாளர் மாநாட்டில் (சென்னை) ........... 12.09.89

தமிழ் பேசும் மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரே இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டும். இல்லையேல் அனர்த்தங்களுக்கு வழிவகுக்கும்.

நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டுக்கு புலிகள் பார்வையாளர்களாக பங்கேற்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். புலிகள் சர்வகட்சி மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கும் ஒரு அமைப்பு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகத் தான் இருக்க வேண்டும். புலிகள் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படவில்லையாதலால் அவர்கள் பங்கேற்க வாய்ப்பில்லை.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுள்ள சீர்கேடுகள், குழப்பங்களையடுத்து ஜனாதிபதியின் அலுவலகம் செயலிழந்து விட்டது. இந்நிலையில் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு பரிகாரம் வேண்டும்.

சர்வகட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதாகப் புலிகள் கூறுகின்றனர். அதேவேளை அக்டோபர் 31 ம் திகதிக்குள் வடக்கு கிழக்கு மாகாண அரசின் ஊழியர்கள் பதவி விலக வேண்டும். இல்லையேல் அவர்கள் துரோகிகளாகக் கருதப்படுவர் என மிரட்டுகின்றனர். இவ்வாறான இரட்டை நிலையைக் கொண்டுள்ள புலிகள் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

இலங்கை அரசியல் சட்டப்படி மாகாண அரசைக் கலைத்து விட்டு ஒரு இடைக்கால அரசை நிறுவ முடியாது. மாறாக மறு தேர்தலுக்கு உத்தரவிடலாம். அல்லது ஆட்சிப் பொறுப்பை ஆளுனரிடம் கொடுக்கலாம்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களுக்கு போதிய பாதுகாப்புக்கு உறுதி செய்ய மாகாண அரசு முதல்வருக்கு உரிய அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். மக்கள் தொண்டர் படைக்கு ஆட்கள் சேர்பதற்கு முதல்வருக்கு மத்திய அரசு அதிகாரங்களை வழங்க வேண்டும்.

தோழர்.சங்கரி பாராளுமன்றத்தில் தமிழில் ஆற்றிய இறுதி உரையின் ஆங்கில ஆக்கம்.

## SANGARY'S LAST SPEECH

**excerpts from his last speech**
**made in Parliament on 18th June 1990**

For the last one year my party EPRLF consistently criticised the Government and the Tigers. Today there is a war. It is obvious that this war was launched by the Tigers. Probably 80% of the Tamil-speaking people are opposed to this fascist group and look forward to the day when their agony will end. This Government must take into account the desire of the majority of the Tamils. . . . .

During the last few days so many atrocities have been committed by the armed forces in Trincomallee, Ampara and Batticaloa districts. We strongly condemn these atrocities. We will not be silent if the Government or the Armed Forces or some politicians think that they can unleash a planned attack on the Tamils under the guise of wiping out the Tigers.. . . .

It seems this House is almost unanimous in condemning the Tigers and enthusiastic about wiping them out. I was to state clearly that this country will face disastrous consequences if the Government fails to review its past mistakes and correct them particularly about finding a permanent solution to the National Question. . . . .

We supported the Indo-Lanka Accord, although it does not satisfy the Tamil aspiration to bring much needed peace to our people. The Tigers attempted to sabotage the peace process, and were cornered and marginalised by the Peace Keeping Force. One must not forget that it was this Government that gave life to the Tigers by their short sighted objective of sending away the IPKF. . . . .

Some political commentators stated that the Tigers used the differences that arose between the EPRLF and the Government, but in a way it is inevitable. We believe in principled politics and we are used to treading our path with courage. We accepted the Accord on the basis that the Government would honour its obligations. If the devolution of powers were implemented according to the Accord, we hoped that our people would be able to live with dignity in their Homeland. The differences arose between us and the Government because of our uncompromising position regarding devolution. Now the differences the Tigers and the Government are about who will control the Northeast not about the rights of the Tamils. . . .

There has never been an incident in history when fascists have survived. They will certainly be wiped out of history. But the Tamil-speaking people will survive and live in this land of ours. The Government and the Opposition must seek a solution to the fundamental problem. ..

In conclusion I would like to state the request of out Secretary General, Comrade Pathmanabha, that the war which affects innocent people must be stopped and meaningful dialogue must be started among all parties representing Tamil, Sinhala and Muslim politics.